# மணப்பாறை நகராட்சி

**2021- ஆம் ஆண்டு மே மாதம் (18.05.2021) 18 – ஆம் தேதி செவ்வாய்க் கிழமை மாலை 4.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

| மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள் | தீர்மானம் |
|---|---|---|
| 18.05.2021 | **பொருள் – 1**<br>2019-2020 ஆம் ஆண்டிற்கு மணப்பாறை நகராட்சிக்கு தணிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கான தணிக்கை கட்டணம் ரூ .88034/-ஐ செலுத்த உதவி இயக்குநர் , உள்ளாட்சி நிதித்தணிக்கை திருச்சிராப்பள்ளி அவர்களால் கொடுக்கப்பட்டுள்ள 2019-20 தணிக்கை அறிக்கையில் பத்தி எண் .67-ல் குறிப்பிட்டுள்ளவாறு உரிய அரசு தலைப்பில் செலுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2. செலவினத் தொகையை வருவாய் நிதியில் மேற்கொள்ளலாம்<br>(ந.க.எண்.4468/2012/பி3) | **தீர்மான எண்.947 அனுமதிக்கப்பட்டது.** |
| 18.05.2021 | **பொருள் – 2**<br>நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.7936/J2/2020 நாள்.17.03.2021 மற்றும் ந.க.எண்.9691/J2 நாள்.11.05.2021-ல் அறிவுறுத்தியுள்ளவாறு , இந்நகராட்சி பகுதியில் அதிகரித்து வரும் கொரோனா நோயினை கட்டுப்படுத்திட நடத்தப்பட்டு வரும் மருத்துவ முகாம் பணிகள் , காய்ச்சல் கண்டறியும் பணிகள் , நகரின் முக்கிய சாலைகள் மற்றும் பொது கட்டிடங்கள் , குழாய் கட்டுப்பாடு பகுதிகள் ஆகிய இடங்களில் கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்யும் பணிக்காகவும், பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்காகவும் , கிருமிநாசினிகள் மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளுக்கான பொருட்கள் ஒப்பந்தப்புள்ளி கோரி வாங்கிடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.4.05 இலட்சம் செலவினம் செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினம் மாநில பேரிடர் மேலாண்மை நிதியிலிருந்து செலவிடலாம்.<br>(ந.க.எண்.1003/2020/எச்2) | **தீர்மான எண்.948 அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr><td>18.05.2021</td><td>பொருள் – 3<br>இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள மலர்செடிகள் மற்றும் மரக்கன்றுகளை அழகாக காட்சியளிப்பதற்கும் செடிகளின் பாதுகாப்பிற்காகவும், நகராட்சி அலுவலகத்தில் செடிகள் வைக்கப்பட்டுள்ள இடத்தினையும், நகராட்சி அலுவலகத்தின் முன்புறமும் சுமார் 340' X 5' அளவிற்கு பிளாஸ்டிக் முள் வேலி அமைக்கவும் அதற்கான தோராய செலவினம் ரூ.33610/- பொது நிதியிலிருந்து செலவினம் செய்யவும் மன்றப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.382/2021/எச்2)</td><td>தீர்மான எண்.949<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>18.05.2021</td><td>பொருள் – 4<br>இந்நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள மலர்செடிகள் மற்றும் மரக்கன்றுகளை பராமரிக்க பிளாஸ்டிக் முள்வேலி அமைக்கும் ப ணிக்கு விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.<br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை</th></tr>
<tr><td>1</td><td>நியூ மஹாராஜா ஸ்டீல்ஸ், திண்டுக்கல் ரோடு, மணப்பாறை</td><td>36582/-</td></tr>
<tr><td>2</td><td>நியூ பாபி டிரேடர்ஸ், 40/6, பைப்பாஸ் ரோடு, மணப்பாறை</td><td>39470/-</td></tr>
<tr><td>3</td><td>சித்திக் ஹார்டுவேர்ஸ் மற்றும் பெயின்டர்ஸ், மஸ்தான் தெரு, மணப்பாறை.</td><td>42450/-</td></tr>
</table>
மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய நியூ மஹாராஜா ஸ்டீல்ஸ், திண்டுக்கல் ரோடு , மணப்பாறை நிறுவன விலைப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு</u><br>அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.382/2021/எச்2)</td><td>தீர்மான எண்.950<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**